# தென்னை மரத்து இளநீரு

தென்னை மரத்து இளநீரு
தேன் போல இனிக்கும் சுவை நீரு
என்றும் எங்கும் கிடைத்திடுமே-தினம்
ஏற்றுக் குடித்தால் நலம் தருமே!
பானத்தில் இளநீர் அரியவகை-எந்த



காலமும் நமக்கு நல்ல துணை
விலையோ ஒன்றும் அதிகமில்லை-இங்கு
இதுபோல் பானம் வேறு இல்லை

இயற்கை தந்தது இளநீரு - நல்ல
இன்சுவை தந்திடும் இளநீரு
உடலின் வெப்பம் தணித்திடுமே-நம்
உள்ளம் தனிலே நிறைந்திடுமே!

கொத்துக் கொத்தாய் காய்த்திடுமே-நம்
அனைவரின் தாகம் தீர்த்திடுமே!
அனைவரும் நாளும் குடித்திடலாம்-வரும்
ஆனந்தம் தனிலே திளைத்திடலாம்!